**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 33/2025**
**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. பூங்கொடி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. செந்தில்குமார்** | **Calling** | : | **காய்கறி வியாபாரம்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **37** |
| | | | **Dated** | : | **24.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 வரையிலான ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திருமதி. பூங்கொடி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கில் காயம்பட்ட நபரான செந்தில்குமார் எனது கணவர். சுமார் மூன்று வருடங்களுக்கு முன்பாக நான் வியாபாரம் பார்த்துக் கொண்டு இருந்தபோது, என் கணவருக்கு அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக தெரிந்தவர்கள் சொன்னார்கள். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று என் கணவரைப்

பார்த்தேன். அவருக்கு முகத்தில் மற்றும் கண்ணில் அடிபட்டு இருந்தது. போலீசார் வந்து விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். **மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. எனது கணவரை யார் காயப்படுத்தியது என்பது பற்றி எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நான் வியாபாரம் செய்து கொண்டு இருந்தபோது, எனது கணவரை இந்த வழக்கின் எதிரிகள் ராமர்பிள்ளை தோப்பில் வைத்து அருவாளால் வெட்டி, காயம் ஏற்படுத்தியதாக தகவல் கிடைத்தன்பேரில், நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கு இரத்தக்காயத்துடன் இருந்த எனது கணவர் செந்தில்குமாரை விசாரித்தபோது, அன்றைய தினம் 04.15 மணிக்கு எனது கணவர் ராமபிள்ளை தோப்பு அருகில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள் என்றும், என் கணவரை பார்த்து அழகர் எங்கே என கேட்டதாகவும், ஏன் கேட்கிறீர்கள் என்று எனது கணவர் கேட்டதற்கு, எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பிவிட்டார் என்றும் சொன்னதாகவும், இதனை அழகரிடம் எனது கணவர் சொல்லப்போவதாகவும் சொன்னதற்கு, வழக்கின் எதிரிகளில் விஸ்வா, பரத், பிரவீன்குமார் ஆகியோர் எனது கணவரை பிடித்து இழுத்து

வந்ததாகவும், மாதவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது கணவரின் மூக்கில் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதகாவும், விக்னு என்ற விக்னேஷ் அருவாளால் தலையை நோக்கி வெட்டியபோது, வலது கையால் எனது கணவர் தடுத்ததால் அவருக்கு வலது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதாகவும், மீண்டும் தலையில் வெட்டியபோது, இடது கையால் தடுத்தபோது, இடது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதகாவும், கார்த்திகேயன் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் என் கணவரின் கண்புருவத்தில் மாறி, மாறி குத்தியதால் காயமானதாகவும், முகேஷ்குமார் கத்தியால் வலது முன் காலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் வரவே மேற்படி எதிரிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் காயம்பட்ட எனது கணவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு எனது கணவர் பேசமுடியாத நிலையில் இருந்ததால் நான் புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.24 18:23:35 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 33/2025**
**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. செந்தில்குமார்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கணேசன்** | **Calling** | : | **காய்கறி வியாபாரம்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **37** |
| | | | **Dated** | : | **24.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 வரையிலான ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. செந்தில்குமார்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பாக ராமபிள்ளைத் தோப்பில் குடிப்பதற்காக சென்றபோது, நான்கு, ஐந்து நபர்கள் வந்தார்கள். என் சட்டையை பிடித்து அடித்தார்கள். கம்பி, கத்தியை வைத்து தாக்கினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆயுதங்கள் அவர்கள் என்னை தாக்கியதற்கு பயன்படுத்திய ஆயுதங்கள் அல்ல. எனக்கு கண், இடதுகை மணிக்கட்டு, வலதுகை மணிக்கட்டு ஆகிய

இடங்களில் இரத்தக்காயம் ஏற்பட்டது. என்னை யார் அடித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலீசார் மதுரையில் நான் சிகிச்சையில் இருந்தபோது விசாரித்தார்கள். நான் மயக்கமாக இருந்ததால் யார் புகார் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 25.07.2022ம் தேதி நான் ராமபிள்ளை தோப்பு அருகில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள் என்றும், என்னைப் பார்த்து அழகர் எங்கே என கேட்டதாகவும், ஏன் கேட்கிறீர்கள் என்று நான் கேட்டதற்கு, எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பிவிட்டார் என்றும் சொன்னதாகவும், இதனை அழகரிடம் நான் சொல்லப்போவதாகவும் சொன்னதற்கு, வழக்கின் எதிரிகளில் விஸ்வா, பரத், பிரவீன்குமார் ஆகியோர் என்னை பிடித்து இழுத்து வந்ததாகவும், மாதவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது மூக்கில் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதகாவும், விக்னு என்ற விக்னேஷ் அருவாளால் தலையை நோக்கி வெட்டியபோது, வலது கையால் நான் தடுத்ததால் அவருக்கு வலது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதாகவும், மீண்டும் தலையில் வெட்டியபோது, இடது கையால் தடுத்தபோது, இடது

மணிக்கட்டில் வெட்டுப்பட்டதகாவும், கார்த்திகேயன் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் என் கண்புருவத்தில் மாறி, மாறி குத்தியதால் காயமானதாகவும், முகேஷ்குமார் கத்தியால் வலது முன் காலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் வரவே மேற்படி எதிரிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் காயம்பட்ட என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் சேர்த்தாகவும், அங்கு நான் பேசமுடியாத நிலையில் இருந்ததால் என் மனைவி புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.24 18:24:15 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 33/2025**
**Prosecution Witness : 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. முத்துப்பாண்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. கணேசன்** | **Calling** | : | **காய்கறி வியாபாரம்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **25** |
| | | | **Dated** | : | **24.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 வரையிலான ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 3 (பட்டியல் சாட்சி 3), **திரு. முத்துப்பாண்டி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கில் காயம்பட்ட செந்தில்குமார் எனது அண்ணன். 2022ம் ஆண்டு என் அண்ணன் அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக போனேன். அப்பொழுது போலீசார் என்னை விசாரித்து ஒரு கையெழுத்தும் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி**

**கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு விசயமாக எனக்கு ஒன்றும் தெரியாது. அதன்பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நான் வியாபாரம் செய்து கொண்டு இருந்தபோது, எனது அண்ணனை இந்த வழக்கின் எதிரிகள் ராமர்பிள்ளை தோப்பில் வைத்து அருவாளால் வெட்டி, காயம் ஏற்படுத்தியதாக தகவல் கிடைத்தன்பேரில், நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கு இரத்தக்காயத்துடன் இருந்த எனது அண்ணன் செந்தில்குமாரை விசாரித்தபோது, அன்றைய தினம் 04.15 மணிக்கு எனது அண்ணன் ராமபிள்ளை தோப்பு அருகில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள் என்றும், என் அண்ணனைப் பார்த்து அழகர் எங்கே என கேட்டதாகவும், ஏன் கேட்கிறீர்கள் என்று எனது அண்ணன் கேட்டதற்கு, எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பிவிட்டார் என்றும் சொன்னதாகவும், இதனை அழகரிடம் எனது அண்ணன் சொல்லப்போவதாகவும் சொன்னதற்கு, வழக்கின் எதிரிகளில் விஸ்வா, பரத், பிரவீன்குமார் ஆகியோர் எனது அண்ணனைப் பிடித்து இழுத்து வந்ததாகவும், மாதவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது அண்ணனின் மூக்கில் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதகாவும், விக்னு என்ற விக்னேஷ் அருவாளால்

தலையை நோக்கி வெட்டியபோது, வலது கையால் எனது அண்ணன் தடுத்ததால் அவருக்கு வலது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதாகவும், மீண்டும் தலையில் வெட்டியபோது, இடது கையால் தடுத்தபோது, இடது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதகாவும், கார்த்திகேயன் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் என் அண்ணனின் கண்புருவத்தில் மாறி, மாறி குத்தியதால் காயமானதாகவும், முகேஷ்குமார் கத்தியால் வலது முன் காலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் வரவே மேற்படி எதிரிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் காயம்பட்ட எனது அண்ணனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு எனது அண்ணன் பேசமுடியாத நிலையில் இருந்ததால் எனது அண்ணி புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 24.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.24 18:24:54 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 33/2025**
**Prosecution Witness : 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. பழனியம்மாள்** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. கணேசன்** | **Calling** | : | **காய்கறி வியாபாரம்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **60** |
| | | | **Dated** | : | **24.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 வரையிலான ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 4 (பட்டியல் சாட்சி 5), **திருமதி. பழனியம்மாள்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கில் காயம்பட்ட செந்தில்குமார் எனது மகன். 2022ம் ஆண்டு என் மகன் அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக போனேன். என் மகனை ஏதோ சண்டையில் அடித்துவிட்டதாகவும், காயம்பட்டு இருப்பதாகவும் சொன்னதால் போய்ப்

பார்த்தேன். இந்த வழக்கு விசயமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நான் வியாபாரம் செய்து கொண்டு இருந்தபோது, எனது மகனை இந்த வழக்கின் எதிரிகள் ராமர்பிள்ளை தோப்பில் வைத்து அருவாளால் வெட்டி, காயம் ஏற்படுத்தியதாக தகவல் கிடைத்தன்பேரில், நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கு இரத்தக்காயத்துடன் இருந்த எனது மகன் செந்தில்குமாரை விசாரித்தபோது, அன்றைய தினம் 04.15 மணிக்கு எனது மகன் ராமபிள்ளை தோப்பு அருகில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள் என்றும், என் மகனைப் பார்த்து அழகர் எங்கே என கேட்டதாகவும், ஏன் கேட்கிறீர்கள் என்று எனது மகன் கேட்டதற்கு, எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பிவிட்டார் என்றும் சொன்னதாகவும், இதனை அழகரிடம் எனது மகன் சொல்லப்போவதாகவும் சொன்னதற்கு, வழக்கின் எதிரிகளில் விஸ்வா, பரத், பிரவீன்குமார் ஆகியோர் எனது மகனைப் பிடித்து இழுத்து வந்ததாகவும், மாதவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது மகனின் மூக்கில் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதகாவும், விக்னு என்ற விக்னேஷ் அருவாளால் தலையை நோக்கி வெட்டியபோது, வலது கையால் எனது மகன் தடுத்ததால் அவருக்கு வலது மணிக்கட்டில்

வெட்டுப்பட்டதாகவும், மீண்டும் தலையில் வெட்டியபோது, இடது கையால் தடுத்தபோது, இடது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதகாவும், கார்த்திகேயன் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் என் மகனின் கண்புருவத்தில் மாறி, மாறி குத்தியதால் காயமானதாகவும், முகேஷ்குமார் கத்தியால் வலது முன் காலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் வரவே மேற்படி எதிரிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் காயம்பட்ட எனது மகனை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு எனது மகன் பேசமுடியாத நிலையில் இருந்ததால் எனது மருமகள் புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.24 18:25:19 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 33/2025**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. ஆரோக்கியம்மாள்** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. முத்துப்பாண்டி** | **Calling** | : | **காய்கறி வியாபாரம்** |
| **Village** | : | **மேட்டுப்பட்டி** | **Religion** | : | **கிறிஸ்தவர்** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **30** |
| | | | **Dated** | : | **24.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**4 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜர். 1 முதல் 3 வரையிலான ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 5 (பட்டியல் சாட்சி 6), **திருமதி. ஆரோக்கியம்மாள்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. இந்த வழக்கின் மற்ற எதிரிகளையும் தெரியாது. இந்த வழக்கில் காயம்பட்ட செந்தில்குமார் எனது மச்சான். சுமார் 3 வருடங்களுக்கு முன்பாக என் மச்சான் அடிபட்டு மருத்துவமனையில் இருப்பதாக போனேன். என் மச்சானை ஏதோ சண்டையில் அடித்துவிட்டதாகவும், காயம்பட்டு இருப்பதாகவும்

சொன்னதால் போய்ப் பார்த்தேன். இந்த வழக்கு விசயமாக எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சி பிறழ் சாட்சியாக மாறிவிட்டதால் அரசு தரப்பில் அவரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதி கேட்டதன் பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 25.07.2022ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு நான் வியாபாரம் செய்து கொண்டு இருந்தபோது, எனது மச்சானை இந்த வழக்கின் எதிரிகள் ராமர்பிள்ளை தோப்பில் வைத்து அருவாளால் வெட்டி, காயம் ஏற்படுத்தியதாக தகவல் கிடைத்தன்பேரில், நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், அங்கு இரத்தக்காயத்துடன் இருந்த எனது மச்சான் செந்தில்குமாரை விசாரித்தபோது, அன்றைய தினம் 04.15 மணிக்கு எனது மச்சான் ராமபிள்ளை தோப்பு அருகில் இருந்தபோது, ஆஜர் எதிரிகள் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்தார்கள் என்றும், என் மச்சானைப் பார்த்து அழகர் எங்கே என கேட்டதாகவும், ஏன் கேட்கிறீர்கள் என்று எனது மச்சான் கேட்டதற்கு, எங்க லிஸ்டில் அழகர் மட்டும் தப்பிவிட்டார் என்றும் சொன்னதாகவும், இதனை அழகரிடம் எனது மகன் சொல்லப்போவதாகவும் சொன்னதற்கு, வழக்கின் எதிரிகளில் விஸ்வா, பரத், பிரவீன்குமார் ஆகியோர் எனது மச்சானைப் பிடித்து இழுத்து வந்ததாகவும், மாதவன் தான் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து எனது மகனின் மூக்கில் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதகாவும், விக்னு என்ற விக்னேஷ் அருவாளால் தலையை நோக்கி வெட்டியபோது, வலது கையால் எனது மச்சான் தடுத்ததால் அவருக்கு வலது மணிக்கட்டில்

வெட்டுப்பட்டதாகவும், மீண்டும் தலையில் வெட்டியபோது, இடது கையால் தடுத்தபோது, இடது மணிக்கட்டில் வெட்டுப்பட்டதகாவும், கார்த்திகேயன் என்பவர் தனது கையில் வைத்திருந்த கத்தியால் என் மச்சானின் கண்புருவத்தில் மாறி, மாறி குத்தியதால் காயமானதாகவும், முகேஷ்குமார் கத்தியால் வலது முன் காலில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அருகில் இருந்தவர்கள் வரவே மேற்படி எதிரிகள் மோட்டார் சைக்கிள்களில் ஏறி தப்பி சென்று விட்டதாகவும், பின்னர் காயம்பட்ட எனது மச்சானை 108 ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாகவும், அங்கு எனது மகன் பேசமுடியாத நிலையில் இருந்ததால் எனது அக்கா புகார் கொடுத்ததாகவும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 24.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.24 18:25:35 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.